# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 6
JUNE 2019 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*
*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே!

உங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சமாதானம் உண்டாவதாக. இந்தியதேச தேர்தல் ஒரு வழியாக முடிவு பெற்றது. **காவி கட்சியின்** மிருக பெலம் குறைந்து ஆட்சியை அடக்கி வாசிப்பார்கள் என்று எண்ணினோம். ஆனால் காவிகட்சி **இரட்டிப்பான பெலம்** பெற்று எழுந்துள்ளது.

**ஜெப கோபுர ஸ்டார்** பிரசங்கிமார் குடும்பங்களை தவிர டெல்லி **கத்தோலிக்க தலைமை பிஷப்மார்களும்,** இந்தியாவில் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் பிரதமரின் பெயரை ஜெபத்தில் குறிப்பிட்டு அவரோடு **காவி கட்சியும்** பெரும் **தோல்வி** அடைய செய்யும் கர்த்தரே என்று தான் ஜெபித்தார்கள். ஆனால் கர்த்தரோ(BJPயின்) அவர்களின் **மிருக பெலத்தை** மேலும் கூட்டி காவி கட்சியை ஜெயிக்க அனுமதித்தார். **பார்வோனின் இருதயத்தை கர்த்தர்தான் மேலும் மேலும் கடினப்படுத்தினார்** என்று வேதம் சொல்லுகிறது.

**"உன்னை தொடுகிறவன் என் கண்மணியை தொடுகிறான்"** என்பதின் அடிப்படையில் அல்லவா கர்த்தர் நம்மை குறிப்பாக **கர்த்தரின் பிள்ளைகளை** பாதுகாக்கிறார். இங்கிலாந்து BBC செய்தி நிறுவனம் கூறுகிறது. 4420 கிறிஸ்தவர்களும் கிறிஸ்த ஊழியர்களும் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர், துன்புறுத்தப்பட்டுள்ளனர் என்கிறது. இப்படியிருக்க கர்த்தரின் நீண்ட பொறுமையின் நோக்கம் என்ன?

**ஒரு பக்கம் நான் உன் வாயாய் இருப்பேன், உன் கையாய் இருப்பேன் நான் உன்னோடு கூடவே இருப்பேன் என்றெல்லாம் மோசேயை தைரியப்படுத்தி நீ தைரியமாக போய் பார்வோனிடம் கேள்** என்று கூறிவிட்டு மறு பக்கத்தில்

# JUNE - 2019

இரகசியமாக **பார்வோனின் இருதயத்தை** கர்த்தரே கடினப்படுத்தி அவர்கள் கேட்டாலும் ஜனங்களை ஆராதிக்க போகவிடாதே என்று பார்வோனின் இருதயத்தை **மேலும் மேலும்** கடினப்படுதினாரே ஏன்?. இதைத்தான் புறமதத்தினர் **திருவிளையாடல்** என்பார்கள். நம் தேவன் குழந்தை இயேசு அல்ல, விளையாட்டு பிள்ளையும் அல்ல.

ஒரே சமயத்தில் கர்த்தர் இரண்டு காரியங்களை நடப்பிக்கிறார். தாம் நேசிக்கும் மக்களின் விசுவாசத்தை அதிகமாக்குகிறார். சோர்ந்து போகாத அந்த விசுவாசம் நம் தோல்விகளில் நமக்கு அவசியம் என்று கண்டார். முறுமுறுக்காதபடி அந்த விசுவாசத்தை அதிகமாக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அதே சமயம் நமக்கு எதிரான முழுவதுமாக அழிக்க பார்வோன் இருதயத்தை மேலும மேலும் கடினப்படுத்தவேண்டியது அவசியம் என்று கண்டார். கிறிஸ்தவ சமூக நலஉதவி ஸ்தாபனங்களுக்கு வரும் வெளிநாட்டு உதவிகள் அனைத்தும் BJP அரசாங்கம் நிறுத்திவிட்டது. ஏராளமான ஏழை பிள்ளைகள், விதவைகள் இதுவரை பெற்றுக்கொண்டிருந்த நல உதவிகள் பெற முடியாமல் போனது. **கிறிஸ்தவ உதவி ஸ்தாபனங்கள் பல மூடப்பட்டன.** பல ஊழியர்கள் வேலையிழந்தனர். ஊழியர்கள் நிலைமை தலைகீழாக மாறியது. இதிலே காவி கட்சியினர் சந்தோஷமடைந்தனர்.

திரு.மோடி அவர்களின் நெருங்கிய நண்பரும், இந்தியாவில் முதல் பெரிய பணக்காரருமான **அம்பானி** அவர்களும், BJP தோற்றுவிடும் என்று சந்தேகத்தில்தான் எதிர்கட்சி தலைவர் திரு. **ராகுல்காந்தி** அவர்களின் ஆதரவு தனக்கு வேண்டும் என்பதற்காக அவரை தனியே போய் சந்தித்து வந்தார்! இப்படி பல தொழில் அதிபர்களின் தந்திரங்கள் தேர்தல் நாட்களில் அரங்கேறின. அதே மாதிரிதான் காருண்யுர் தொழில் அதிபரும், இயேசு அழைக்கிறார் அதிபருமான சகோ. பால் தினகரன் அவர்கள் நேரில் திரு. மோடியையும் சந்தித்து வாழ்த்தி வந்தார்.

## காவி கட்சியினர் பெரும்பான்மை பெலம் பெற்றது எப்படி?

❖ தேர்தல் நாள் நெருங்கிவரும் கடைசி மாதத்தில் திரு.**மோடி** அவர்களின்ஆட்கள் மக்கள் மனதை மாற்ற உபயோகித்த கடைசி ஆயுதம். **இந்து தேசம் இந்து மதத்தினருக்கே** நீ உண்மையான **இந்துவாக இருந்தால்** உன் தகப்பன் **நல்ல இந்து** குடும்பத்தில் பிறந்தவனாக இருந்தால் நீ கும்பிடும் **தாய் மதத்தின்** தெய்வமான விக்கிர தெய்வங்களுக்கு துரோகம் செய்யாதே. **இந்துமத** கட்சியான BJPக்கு (காவி கட்சிக்கு) நீ ஓட்டு அளிக்காமல்போனால் அது **தெய்வ குத்தமாகும்.** இதை நிர்வாண சாமியார்களை கொண்டும் இந்துமத பிடாதிபதிகள் மூலமாகவும் இந்து சன்னியாசிகள் மூலமாகவும் அறிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

❖ தேர்தல் நாளின் கடைசி ஒரு வாரம் திரு.மோடி அவர்கள் இந்திய மக்கள் அனைவரும் காணும் வகையில் ஒரு மலைக்கு **காவி போர்வையில்** உடலை போர்த்திக்கொண்டு **குகைக்குள்** அமர்ந்து கண்களை மூடி தவம் இருப்பதைப்போல் அனைத்து மீடியாவுக்கும் போஸ் கொடுத்த காட்சி திரு.மோடி அவர்கள் விக்கிரக தெய்வங்கள் மேல் அளவிலா பக்தி கொண்டவராக தன்னைக் காட்டிக்கொண்ட அந்த காட்சி ஓட்டுபோடும் **இந்துமத மக்களின்** மனதை தன் பக்கம் இழுக்க செய்த **கவர்ச்சி நாடகம்** என்று எதிர்கட்சிகளினால் விமர்ச்சிக்கப்பட்டது. இது மக்களை BJPக்கு ஓட்டுப்போடவைக்கும் தந்திர ஏற்பாடு என்றும் இது தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரானது என்றும் இதன்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்கட்சிகள் தேர்தல் அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் அனைவரும் விக்கிரக வணக்க இந்துமத **தெய்வ குத்தம்** என்ற வார்த்தைக்கு பயப்படும் குருட்டு நம்பிக்கை உள்ளவர்கள். இவர்களின் இந்த பலவீனத்தை BJP ஆதாயமாக்கிக்கொண்டது. மற்றும் RSS ன் மற்றொரு அமைப்பான வன்வாசி கல்யாண் ஆஸ்ரம் என்ற இயக்கம் கிராமங்களிலும், ஆதிவாசிகளிடேயும் சென்று நீங்கள் தாமரை சின்னத்துக்கு BJP ஓட்டு போடாவிட்டால், உங்களுக்கு அரசாங்கத்தின் நல திட்டங்கள் ரேஷன் பொருட்கள் எதுவும் கிடைக்காது என்று பயமுறுத்திவிட்டனர். அப்படித்தான் கிராம மக்களின் ஓட்டுக்கள் BJPக்கு கிடைத்தது.

❖ BJP ஜெயித்ததற்கு மற்றொரு மிக முக்கிய காரணம், மக்கள் ஓட்டுப்போடும் **மின்னணு எந்திரங்களை பயன்படுத்தி BJPக்கு சாதகமாக ஓட்டு விழும்படி இரகசிய ஏற்பாடு செய்தார்கள்.** ஒரு இடத்திலிருந்து **ரிமோட்** என்ற கருவியை அமுக்கினால் ஓட்டுபோடும் மின்னணு எந்திரங்களில் மக்கள் **எந்த பொத்தனை** அமுக்கினாலும் **ஓட்டு BJPக்கே போய் சேரும்** வகையில் ஏற்பாடு செய்ததாக கூறப்படுகிறது. அப்படி மாற்றம் செய்யமுடியும் என்பதை ஒரு வல்லுனர் நீதிமன்றத்திலும் TV நிலையத்தினர் முன்பும் நிரூபித்து காட்டியதை வாசகர்கள் தினசரி செய்திதாள்களிலும்,TV சேனல்களிலும் கண்டும் வாசித்துமிருப்பீர்கள். அப்படி ஒரு ஏற்பாடு நடந்திருந்தால் அதன்மூலம்தான் BJPக்கு பல வடமாநிலங்களில், **வாக்கு எண்ணிக்கை அதிகமாயிருக்கலாம்** என்று கூறுகிறார்கள்.

☐ மின்னணு எந்திரங்கள் தங்களை ஏமாற்றாது என்ற உறுதியில் திரு. **மோடி** அவர்கள் பிரதமராக **ஜெயித்தபின்** வைக்க வேண்டிய **விருந்தை** தேர்தல் அறிவிப்பதற்கு **முந்தின** நாள் மாலை BJPயுடன் சேர்ந்து தேர்தலில் நின்ற கூட்டணியினருடன் BJP, RSS ஆகிய அனைவருக்கும் அந்த விருந்து அளிக்கப்பட்டது. இந்த விருந்து வைக்க எது இவர்களை தைரியப்படத்தியது. மின்னணு எந்திரம் அல்லாது வேறு என்ன?

தமிழ்நாட்டில் இரட்டை முதல்வர்களில் ஒருவரான திரு. பன்னீர்செல்வம் அவர்களின் மகன் நின்ற தொகுதியில் **அடிக்கல் நாட்டுவிழா** ஒன்றில் வைக்கப்பட்ட **கல்வெட்டில்** ஒரு வாரத்துக்கு முன்பே பன்னீர்செல்வம் அவர்களின் மகன் பெருக்கு பின்னால் MP என்று கல்வெட்டில் பொரிக்கப்பட்டது எப்படி? தொகுதி பூத் எண்ணிக்கைக்குமேல் நூற்று கணக்கில் மின்னணு எந்திரங்கள் அங்கு காணப்பட்டதை கண்ட மக்கள் போராட்டம் நடத்தினார்களே!. அதையும் **தேர்தல் அதிகாரி** கண்டுடிகாள்ள வில்லையே.! இப்போது துணை முதல்வர் பனனீர்செல்வம் **மகன் மட்டும்** AIADMK யில் ஜெயித்தது எப்படி?

இப்படி பல தில்லுமுள்ளுகள் வட இந்தியாவில் நடந்ததால் எளிதாக மிகப்பெரிய மெஜாரிட்டியுடன் BJP வெற்றிபெற்றது. ஆகவே ஜெயித்தது திரு. மோடி என்று கூறுவதைவிட **தோற்றது அனைத்து இந்திய மக்கள்தான்** என்றால் அது மிகையாகாது.

☐ அடுத்த காரணம் அனைத்து **தேர்தல் அதிகாரிகளையும்,** அனைத்து **காவல்துறை** அதிகாரிகளையும் திரு.**மோடி** அவர்கள் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் இப்போது தேர்தல் வேண்டாம் என்று டெல்லியிருந்து கட்டளை வந்தால் **தேர்தலை** தள்ளிப்போடுவர்கள். அதே மாதிரி உயர்நீதிமன்ற(High Court) பெரும்பாலான நீதிபதிகளும் இவருடைய கட்டுப்பாட்டில் இருந்ததாக கூறுகிறார்கள்.

☐ பிஜேபி ஜெயிக்க மற்றொரு **மிக முக்கியமான** காரணம். கூட்டணிகளுக்குள் ஒற்றுமையில்லாமல்போனாதுதான். அது BJPக்கு அனுகூலமாகிபோனது. மேலும் **பிரதமர்** பதவிக்கு திரு மோடியை எதிர்த்து நின்ற கூட்டணை நாங்கள் ஜெயித்தால் பிரதமர் இவர்தான் என்று எந்த நபரையும் குறிப்பிட்டு அறிவித்து தேர்தலில் முன்னிறுத்த விரும்பவில்லை. **ராகுல்** பிரதமர் ஆகவேண்டும் என்று DMK தலைவர் **ஸ்டாலின்** அவர்கள் கூட்டணி கூட்டத்தில் முன்மொழிந்தவுடனே கல்கத்தா முதல்வர் **மம்தா பானர்ஜிக்கு** கோபம் வந்துவிட்டது. வடஇந்திய கூட்டணியில் உள்ள பெரும்பான்மையினர் **மம்தா பானர்ஜி** அவாகள் **கைசுத்தம்** உள்ள பெண்மணி. **நல்ல நிர்வாகி** ஆகவே அவர் பிரதமரானால் நன்றாக இருக்கும் என்று விரும்பினார்கள். ஆனால் அந்த அம்மையாரின் **முன்கோப** சுபாவம், **யாரையும் மதிக்காத** சுபாவம் ஆகியவை அந்த தேர்வுக்கு பெரும் தடையாக இருந்தது.

அடுத்து, **மாயாவதி(**உபி.) பிரதமராக முயன்றார். இவர் ஊழலில் பெயர் பெற்றவர். ஆகவே பெரும்பாலானாவர்கள் விரும்பவில்லை. வேறு இரண்டு,மூன்று நபர்கள் பிரதமராக முயன்றார்கள்.

இப்படி பிரதமர் யார் என்பதிலேயே **கூட்டணிகளுக்குள் ஒற்றுமை இல்லாததால்** இந்தியா முழுவதிலும் உள்ள மக்களில் தமிழ்நாட்டைதவிர கூட்டணிக்கு ஓட்டுபோடாமல் திரு.மோடிக்கே ஓட்டுபோட்டார்கள் என்று அரசியல் கணிப்பாளர்கள் கூறுகிறார்கள். எப்படியோ. தேர்தல் முடிந்தது. இரண்டு மடங்கு அசுர பெலத்தோடு BJPயின் திரு.மோடி அவர்கள் பிரதமரானர்.

பிரதமர் **திரு.மோடி** அவர்களுக்கு நம் வாழ்த்துக்கள் ஜாமக்காரன் சார்பில் கூறுகிறோம்.

☐ BJP காவி கட்சி ஆடசிக்கு வந்துவிட்டது. இனி (கோமாதா கூட்டத்தினர்) **பசுவதை தடுப்பு, சங் பரிவார், இந்துமத பாதுகாவலர்** என்ற பெயரில் RSS தீவிரவாதிகளின் ஆட்டம் மிகவும் அதிகமாகும்.

இதற்கு காரணம் கிறிஸ்தவ விசுவாசிகளின் ஜெபம் கர்த்தரின் சமூகத்தை எட்டவில்லை என்றுதான் அர்த்தம் கொள்ள வைக்கிறது.

☐ **தமிழ் கிறிஸ்தவ சபைகளின் மாநாடு** என்று கூடி ஜெபித்தார்கள். **செத்துப்போன மரியாளோடும்,** அந்தோனியாரோடும் ஜெபிக்கும் **கத்தோலிக்கர்களோடு** மேலும் செத்துப் போனவர்கள். செத்துப்போன மூதாதையினர் ஆகியவர்கள் பாவம் செய்து குடிக்காரர்களாக வாழ்ந்து மரித்திருந்தாலும் அவர்களை **பரலோகத்துக்கு** அனுப்ப **மாதா தொலைகாட்சியில்** செத்துப்போனவர்களின் தலைக்கு 500/ என்று **வசூலித்தார்கள்.** அன்று **போப் ஆண்டவர்** வசூலித்ததைப்போல இப்போது **மாதா தொலைக்காட்சி** மூலம் வசூலிக்க தொடங்கியுள்ளார்கள். இப்படிப்பட்ட வசனத்துக்கு விரோதமான உபதேசம் கொண்ட கத்தோலிக்கர்களையும் பிஷப்மார்களையும் அழைத்து தமிழ் கிறிஸ்தவ ஊழியர்களின் அந்த மாநாட்டில் ஜெபித்தால் அந்த மாநாட்டு ஜெபம் எப்படி கேட்கப்படும்? இதைக்குறித்து மே மாதம் ஜாமக்காரனில் எழுதினேன். உடனே பலர் கத்தோலிக்க பிஷப் யாரும் மேடையில் ஜெபிக்கவில்லை என்றும் அந்த கூட்டத்தில் கத்தோலிக்க பிஷப் இல்லை என்று எனக்கு எழுதினார்கள்.

ஆனால் இவர்கள் இந்த மாநாட்டை கூட்ட தீர்மானம் எடுக்கும் **முதல் கமிட்டியில்** கத்தோலிக்க பிஷப்மார்களை அழைக்கவேண்டும் என்று தீர்மானம் எடுத்து நோட்டீஸ்சும் அச்சடித்தனரே!. அந்த பிஷப்மார்களே கூட்டத்துக்கு வரஇயலாது என்று கூறியபின் மறுபடியும் ஒரு புது நோட்டீஸ் அச்சடித்தனர். இப்படி இவர்கள் **மூன்றுமுறை** இந்த மாநாட்டுக்காக நோட்டீஸ்களை திருத்தி திருத்தி அச்சடித்து விநியோகித்தனர். இவர்கள் எல்லாரும் (ஹைதரபாத்) கல்வாரி கோட்டை சபை **சகோ.சதிஷ்** தவிர மற்றவர்கள் யாவரும் **அந்நியபாஷையில்** உளருபவர்கள். இப்படிப்பட்டவர்களின் ஜெபத்தை எப்படி கர்த்தர் கேட்பார்? இவர்களின் கூட்டத்தில் ஜெபத்தில் **பொய்யாய் பெயர் அழைக்கும்** ஊழியரும் ஜெபித்தால் அந்த ஜெபம் எப்படி கேட்கப்படும்?.

இதுபோதாதென்று இவர்களோடு சேராத **சகோ.பால்தினகரன்** 72மணி நேர ஜெபம் என்று **கத்தோலிக்க பிஷப்புடன்** மற்ற சபைகளின் பிஷப்மார் அணைவரும் கூடி ஜெபித்திருக்கிறார்கள். AOG **சபை பாஸ்டர்.மோகன்** குழுவினர் அழைத்துவரமுடியாத கத்தோலிக்க பிஷப் அவர்கள் **பால்தினகரனின்** அழைப்பை ஏற்றார். இந்த ஜெப கூட்டமும் AOG சபை **பாஸ்டர்.மோகன்** அவர்களின் சபையிலேயே 2019 ஏப்ரல் 2 முதல் 5ம் தேதி வரை நடைபெற்றது. இந்த ஜெபமும் நூாற்றுக்குநூாறு கேட்கப்பட்டிருக்காது. இது கோடீஸ்வர ஊழியர்கள் கோடிக்கணக்கில் செலவு செய்து ஏற்பாடு செய்யப்பட்ட ஜெப கூட்டமாகும்.

இப்படிப்பட்ட ஜெபகூட்டங்கள் அனைத்தும் நடத்தியது வேஸ்ட் ஆனது. யாருடைய ஜெபத்தை கர்த்தர் கேட்பார். யோ 15:7. **நீங்கள் என்னிலும் என் வசனம் உங்களிலும் நிலைத்து இருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்** என்று இயேசு கூறினார். வசனத்தின் அடிப்படையில் ஊழியம் செய்யாத பொய் பேசும் ஊழியர்கள் ஒன்று சேர்ந்து ஜெபித்தால் அந்த ஜெபத்தை கர்த்தர் கேட்கமாட்டார் என்பதை இந்த வசனம் உறுதி செய்கிறது.

இந்த ஜெபங்களை கர்த்தர் கேட்காமல்போனதால்தான் **காவி கட்சி** பெரும்பான்மையாக ஜெயித்து மறுபடியும் திரு.மோடி அவர்கள் பிரதமாரானர். விக்கிரங்களை ஆராதிப்பவர்கள் இந்தியாவை ஆளும் தலைவர்களானர்கள். இந்தியா கர்த்தரின் **ஆசீர்வாதத்தையும் இழந்தது.**

**புதுவருட தீர்க்கதரிசனம் கூறும் கள்ள ஊழியர்கள்** அனைவரும் இந்தியாவில் **புதிய ஆட்சி** உண்டாகும், **மலரும்** என்றுதான் கூறினார்கள், எழுதினார்கள் ஆனால் இந்த தீர்க்கதரிசனம் என்னவாயிற்று ?

இனி இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ சபைகளுக்கு, கிறிஸ்தவ ஊழியர்களுக்கு புதிய அரசின் தொடர்புடைய ஆர்எஸ்எஸ்,பஜ்ரங்தள், இந்து முன்னனி தீவிரவாதிகளால் ஏற்படபோகும் விளைவுகளை பிரச்சனைகளை அனுபவித்துதான் ஆகவேண்டும். ஜெபத்தோடு எதிர்க்கொள்வோம். இப்படிப்பட்ட நெருக்கங்கள் **உண்மையான ஊழியம்** எது?. உண்மையான **ஊழியர்கள் யார்?** என்பதை வெளிப்படுத்தும்.

ஜாமக்காரன் வாசகர்கள் இந்தியாவின் **பிரதமர். மோடி** அவர்களை **ஆசீர்வதித்து** ஜெபிப்போம். ஆட்சியிலிருப்பவர்களுக்காக, போலீஸ் உயர் அதிகாரிகள்,காவல்துறையினர், நீதிமன்றங்கள், நீதிபதிகள் ஆகியவர்களுக்காக தினசரி ஜெபம் செய்வோம். நம் கிறிஸ்தவ வேதம் அப்படிதான் ஜெபிக்கும்படி கட்டளையிட்டுள்ளது. (1 தீமோ. 2:1,2)

கர்த்தரின் பணியில்

**டாக்டர்.புஷ்பராஜ்**

# கிறிஸ்தவர்கள் தாலி கட்டலாமா? அது பாவமா?

(SELECTED)

**தாலி** என்ற ஒன்று இந்துக்கள் மத்தியிலே, திருமணத்தின்போது ஆண், பெண்ணுகளுக்கு திருமணமானதற்கு அடையாளமாய் அணிவதாகும். இது தமிழ்நாட்டில் 9,10ம் நூற்றாண்டில்தான் பரவி விமரிசையானது. தாலி என்பது ஆரம்பத்தில் **மஞ்சள்** கயிற்றில், **மஞ்சளை** கோர்த்து, மணவாளன், மணவாட்டி கழுத்திலே போடுவதாய் இருந்தது. நாளாக நாளாக **மஞ்சளோடு** கூட ஒரு சிறிய **தங்ககாசில்** நட்சத்திரம், சூரியன், தாமரை, ரோஜா போன்று உருவம் உருவாக்கி அணிந்தார்கள். இவை எல்லாம் சேர்ந்ததுதான் **தாலி.** அதன்பின்பு, இந்துமத சடங்காச்சாரங்கள் பிரசித்தி பெற்றபோது, அந்த தங்ககாசை இந்து தெய்வங்கள் போலவும் செய்தார்கள். தங்கக்காசில் இந்து தெய்வங்களின் உருவத்தை பதித்தார்கள். பிற்பாடு, அவரவர்களின் பொருளாதாரத்திற்கு ஏற்ப, முழுமையாய் மஞ்சள் கயிறை எடுத்துவிட்டு, **தங்கச் செயினில்,** தங்கக் காசு அல்லது தங்கத்தில் சுவாமி உருவங்கள் வைத்து அணிந்தனர். ஒரு சிலர் பழமையை மறவாமல் தங்கச் செயினோடு, சிறிய நீளமான மஞ்சள் கயிறும் **மஞ்சளும் சேர்த்து** அணிந்தனர். இப்படிப்பட்ட பழக்கவழக்கங்கள், கிறிஸ்தவம், இஸ்லாம் சமுதாயத்திலும் வந்தன. **கிறிஸ்தவர்கள்** சிலுவை அல்லது வேறு உருவங்களை தொங்கவிட்டனர். **முஸ்லீம்களோ** கறுப்பு கலர் பாசிகளை அணிந்தனர்.

வெளிநாட்டில் திருமணத்தின்போது, மாப்பிள்ளையும், பொண்ணும், **மோதிரங்களை** மாற்றிக்கொண்டு, திருமணத்திற்கு **அடையாளமாய்** அதை வைத்திருப்பார்கள். **ஆதி அகநானூறு** கால தமிழர்களோ, மாப்பிள்ளையும், பொண்ணும் **மாலையை மாற்றிக் கொண்டனர்.** தற்கால பெந்தெகொஸ்தே சபைகள் பலவற்றில், தாலிகட்டாமல், பைபிள் மாற்றிக் கொண்டார்கள். நமது வேதம் இஸ்ரவேலரின் பண்பாட்டையும் அவர்களின் நாகரீகத்தையும் மையமாக வைத்தே எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் **நிச்சயதார்த்தம்** பண்ணியவுடனே, புருஷனும் மனைவியுமாய் ஆகிவிடுகிறார்கள். **தாலிகட்டுவதுமில்லை, திருமணம் நடத்துவதுமில்லை.** மாறாக, பெரிய பணக்காரார்களாய் இருப்பவர்கள் **புருஷன்-மனைவியாய்** ஆனபிறகு, **கல்யாண விருந்து** வைப்பார்கள். இதனாலே, வேதத்திலே **கல்யாணம்** என்று வந்தாலே, கல்யாண விருந்துக்கான கிரேக்க வார்த்தைதான் போடப்பட்டிருக்கும் (GK GAMOS-வெளி19:7: மத்22:3-12). யோசேப்பும், மேரியும் **நிச்சயித்த** உடனேயே **கணவன் மனைவி** ஆனார்களே! திருமணம் என்ற ஒன்றே கிடையாது. எனவே தாலிப்பற்றிய பிரச்சனையே இஸ்ரவேலிலே இல்லை.

**பகுத்தறிவு** சிந்தனை தமிழ்நாட்டில் நுழைந்தபோது, ஆணும் பெண்ணும் சமம் என்று சொல்லி, "பொண்ணுக்கு மாத்திரம் ஏன் தாலி? ஆணுக்கு வேண்டாமா?" என்ற குரல் ஈ.வெ.ரா.பெரியார் மூலம் உருவாகி, சில தமிழர்கள், அகநானூறு முறைப்படி மாலை மாற்றிக்கொண்டனர். தாலியிலே **விக்கிரகம்** இருக்கிறது என்பதால் அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழ்நாட்டில் எழும்பிய,AG, CPM, ACA போன்ற **பெந்தெகொஸ்தே சபைகள், தாலி** முறையை விலக்கினர். அது **"விக்கிரகம்", "இந்துக்களின் பாரம்பரியம்"** என்று முத்திரை போட்டனர். **அது பாவம்** என்று தாங்களாகவே போதித்தனர்.

நமது வேதம், தாலிபற்றி சொல்லவே இல்லையே! சில பெந்தெகொஸ்தே சபைகளிலும், பாரம்பரிய, பெயர் கிறிஸ்தவ சபைகளிலும், விக்கிரகங்கள் இல்லாத தாலிகட்டும் முறை இருந்தது. "விடுதலை கிறிஸ்துவின் சபை" என்ற பெயரில் உள்ள சபையின் திருமண ஆராதனையில், இப்படி ஆவிக்குரிய சபைகளில் குழப்பமாய் உள்ள இந்த தாலி விஷயத்தை கைவிட்டு, ஆதி தமிழர் பண்பாட்டின்படி, **மாலை மாற்றும்** முறையை கொண்டு வந்தார்கள். முடிந்தவர்கள் ஆணும்-பெண்ணும் **மோதிரம்** மாற்றிக்கொண்டு திருமணத்தை உறுதிப்படுத்தலாம் என்றும் வரையறுததார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் **சமஅந்தஸ்து** தர எண்ணினார்.(கலா3:28). **வேதம் சொல்லாத திருமணம்: வேதம் சொல்லாத தாலி.** இதிலே குழப்பம் தேவையே இல்லையே: இதனாலே நரகம் போவான் என்றெல்லாம் பேசும் பேச்சு பிசாசின் வேலை. **மாலையைக்கூட** பிசாசு என்று சொல்லும் பெந்தெகொஸ்தே சபைகளும் உண்டு. **தாலி வேண்டாம் என்றால், வேதம் காட்டாத திருமணம் வேண்டாமா?** அது தமிழர் பண்பாடு, நாகரிகம் என்று கூறி இப்படியே தாலி கட்டுவதை ஏற்றும், **ஏற்காமலும்** இருப்போர் மத்தியில், அனைவரையும் ஆதாயப்படுத்தும்படி **தமிழக கலாச்சாரப்படி** திருமணம் நடப்பதுதான் உசிதம்.

சபையார் சிலர், "தாலி கட்டவேண்டும்" என்று கேட்கும்போது, "அது வேண்டாம்: அது விக்கிரகத்திற்கு கொண்டுபோய்விடும்" என்று மறுத்தாலும், "தாலியை ஜெபித்தாவது கொடுங்கள்" என்பார்கள். அப்படிச் செய்வது தவறு என்று கூறி, திருமண ஆராதனையில் சில சபைகளில் தாலி கட்டுவதில்லை. திருமண ஆராதனை முடிந்தபின், சில விசுவாசிகள் தாங்களாகவே வீட்டுக்கு சென்று தாலிகட்டிக் கொள்வார்கள். A.G. சபையிலும் இப்படி நடக்கிறது. இதைப் பார்த்த பெந்தெகொஸ்தே ஊழியார்கள், "இந்தப் **பாவத்தை** ஏன் கண்டுகொள்ளாமல் இருக்கிறீர்கள்? இது Compromiseஆ" என்று கேட்கிறார்கள். **தாலி கட்டுவதோ, கட்டாததோ பாவம் என்று பைபிள் சொல்லவிலையே! பூ வைப்பதோ, பொட்டு வைப்பதோ பாவம் என்று வேதம் சொல்லவில்லையே!**

இப்படிபட்டவர்கள் வேதத்தை நன்கு தியானிப்பதில்லை. **விருத்தசேதனம் பண்ணவேண்டாம்** என்று போதித்த பவுல், **தீமோத்தேயுவுக்கு** விருத்தசேதனம் பண்ணி ஊழியத்திற்கு அனுப்பினானே!, அது Compromiseஆ? (அப்16:3: 1தீமோ4:14). வேதமே சொல்கிறது: "விருத்தசேதனம் பண்ணுகிறதும் பாவமல்ல: தேவனுடைய கற்பனைகளை

கைக்கொள்ளுகிறதே காரியம்" (1 கொரி7:19:கலா6:15). பவுல் எருசலேமில் சுத்திகரிப்பு பண்ணிக்கொண்டானே ஏன்? பாவமில்லையா! 1கொரி9:20-21 சொல்வதைப் பாருங்கள்: **"யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, யூதருக்கு யூதனைப் போலவும், நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, நியாயப் பிரமாணத்துக்கு கீழ்பட்டவனைப்போலவுமானேன். நியாயப் பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்கு முன்பாக நியாயப் பிரமாணமில்லாத வனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளவனாயிருக்கிறேன்".** பவுலாவது நேரிடையாகவே கிரியையில் இறங்கினான்: அது தவறு இல்லை என்று விளக்குகிறான்.

ஒரு தொழிற்சாலையோ, ஆபீசோ நடத்தும் ஆவிக்குரிய கிறிஸ்தவன், தீபாவளி, **ஆயுத பூஜை** கொண்டாடுவதெல்லாம் தவறு என்று சொல்லுகிறவன், அந்தப் பண்டிகைகளுக்கு லீவு விடாமல் இருப்பானா? அப்படி லீவு விடுவது Compromiseஆ? இல்லையே! மட்டுமல்ல.... ஒரு ஆபீஸில் வேலை செய்யும் கிறிஸ்தவனுக்கு தீபாவளி விடுமுறை வந்தால், அந்த விடுமுறையை ஏற்றுக்கொள்ளமாட்டாரா? அது ஆபீசை Compromise பண்ணுவதற்கா? ஒத்துப்போகலையா? இல்லையே! அது பாவமுல்ல, வேத வசன மீறுதலுமல்ல.... அது அரசாங்க கட்டளை. மேலும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் இந்து மதத்தினருக்கு விடுமுறை கொடுத்துதானே ஆகவேண்டும். ஆனால் தொழிற்சாலையின் கிறிஸ்தவ முதலாளியானவன் அந்த பண்டிகையில் ஈடுப்பட்டால்தான் தவறு!

மேலும், தேவ சமூகத்து ஆசாரியனின் அப்பங்களை தாவீது சாப்பிட்டது பாவமென்றா வேதம் சொல்கிறது? **ஓய்வு நாளில்** கதிர்களை சீஷர்கள் கொய்து தின்றது பாவமென்று பரிசேயர் சொல்லலாம்: ஆனால் இயேசு சொல்லவில்லையே (மத்12:1-4). நியாயப்பிரமாணம் முடிந்து, கிறிஸ்துவின் ஆவியின் பிரமாணம் உள்ள காலத்தில், இன்னும் பரிசேயர்களும் சதுசேயர்களும் கிறிஸ்தவ உலகில் இருப்பது வேதனைக்குரியதாகும். சத்தியத்தைச் சொல்லி, கண்டித்து நடத்துவது நம் பணி! அதை ஏற்று செயல்படுவது விசுவாசிகளின் கடமை! அவனவனின் கிரியைகளுக்கேற்ற பலன் இயேசுவோடுகூட வருகிறது! (வெளி22:12). தாலி கட்டுவது பாவமுமல்ல: புண்ணியமுமல்ல: **தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே** காரியம்! **சமுதாயத்தோடு ஒத்துப்போய்** கர்த்தருக்குள் வாழ்வோம்! **தாலி கட்டும் முறை,** பெண் அடிமைத்தனத்திற்கும், விக்கிரக ஆராதனைக்கும் கொண்டுபோய் விடக்கூடாது. அதுதான் முக்கியம். **-- (டாக்டர்.சேவியர்)**

**குறிப்பு:** மேலே வாசித்த கட்டுரை எல்லா சபைகளும் ஏற்றுக்கொள்ளாது ஒருவேளை ஆவிக்குரிய சபை அங்கத்தினராக இருந்தாலும் பெண் குடும்பம்- மாப்பிள்ளை குடும்பம் ஒரே விதமான நம்பிக்கையில் உறுதியாக இருந்தால்தான் மேலே குறிப்பிட்ட ஆலோசனை செயல்படுத்தமுடியும்.

# டிரைபல் மிஷன் வருடாந்திர கூட்டங்கள்.

## 2019ம் வருடத்தில் டிரைபல் மிஷன் வருடாந்திர கூட்டம் நாகர்கோவில்



இம்முறை **டிரைபல் மிஷன்** வருடாந்திர கூட்டம் தமிழ்நாட்டில் நாகர்கோவில் **புதுகுடி CSI** சபையில் வைத்து சிறப்பாக நடந்தது **புதுகுடி CSI** சபை ஆயர் Rev.N.ஜெசின் அவர்கள் கூட்டம் நடத்த பெரிதும் உதவியாக இருந்தார்.

நாகர்கோவிலில் நடந்த இந்த கூட்ட ஏற்பாடுகளை Dr.Sam Sahayadhas மற்று அவரோடு பல டாக்டர்களும், இஞ்ஜினியர்களும் டிரைபல் மிஷன் பங்காளர்களும் இவர்களுடன் **சகோ. டான்** அவர்களும் இணைந்து 3 நாட்கள் கூட்டங்களை மிகச் சிறப்பாக நடத்தினர்.



**Dr. Maralidar,** M.D.,

நடைபெற்ற மூன்றுநாள் கூட்டங்களிலும் மிஷனரிகளின் அனுபவங்கள், ஆதிவாசி விசுவாசிகளின் சாட்சிகள் யாவும் மக்கள் இருதயத்தி **மிஷனரி ஊழியத்தில்** இன்னும் கூடுதல் ஈடுபாடு வைக்க ஏவப்பட்டது. ஆதிவாசி சிறுமி ஒருவள் **ஆதிவாசி பாஷையிலேயே** இயேசுவை புகழ்ந்து பாடியது கர்த்தரை மகிமைப்படுத்தியது.



**டிரைபல் மிஷன்** மூலமாக சுமார் 225 மிஷனரிகள் இந்தியாவின் வட மேற்கு பாலைவன பிரதேசமாகிய **ராஜஸ்தான்** வரை பணிதளங்கள் அமைத்து ஊழியம் செய்து இப்போது அங்கெல்லாம் ஆலயங்கள் பணிது அந்த ஆலயங்களில் ஆராதனைகள் ஆசிர்வாதத்தோடு நடைபெருகிறது.

ஊழியத்தின் சிகரமாக இந்தியாவின் **மேற்கு மலை தொடர்ச்சியில்** உள்ள **மாவோயிஸ்ட்**

**தீவிரவாதிகள்** இயேசுவையும் இயேசுவின் அன்பையும் நம் மிஷனரிகள் மூலமாக அறிந்து. அவர்கள் தங்கள் ஆயுதங்களை தூக்கி எறிந்து **தீவிரவாத குழுவிலிருந்து** விலகி இயேசுவை குலதெய்வமாக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று சபை விசுவாசியாக மாறியுள்ளார்கள்.

மட்டுமல்லாமல் அவர்களில் ஒரு **தீவிரவாதி** மிஷனரியாகவும் அவரே சபை நடத்தும் **பாஸ்டராகவும்** மாறியது எல்லா அற்புதங்களிலும் **சிறந்த அற்புத**மல்லவா! கிறிஸ்துதான் அந்த பெரும் மாற்றத்தை **டிரைபல் மிஷனரிகள்** மூலமாக உண்டாக்கினார். கர்த்தர் **அவர்களுக் காகவும் ஆதிவாசிகளுக்காகவும்** சிலுவை யில் அறையப்பட்டார் என்ற செய்தி அவர் களை இயேசுவை **தெய்வமாக ஏற்றுக் கொள்ளச்செய்தன.**

## ஆதிவாசி மிஷனரி பணிதளங்களில் இலவச மருத்துவ சிகிச்சை



**Dr. முரளிதர்,** M.D.,

அப்படிப்பட்ட மலைகளுக்குள்ளே இருக்கும் **ஆதிவாசிகளை, தீவிரவாதி களை** சந்தித்து இயேசுவை அறிவித்து அவர்களுக்கு **இலவச வைத்தியம்** செய்ய பல **டாக்டர்கள்** தங்களை ஒப்பு கொடுத்துள்ளனர். அதில் **நாகர் கோவிலில்** பிரபல சத்திர கிரியை (ஆப்பரேஷன்) நிபுனரான **Dr. Sam Sahaya Dhas,** M.S., அவர்களும் அவரோடு **சில டாக்டர்களும்** கேரளத்திலிருந்து சில டாக்டாகளும் இவர்களோடு இணைந்து தங்களுடைய 1 வார வருமானத்தை இழந்து இப்படி அடிக்கடி ஆதிவாசி மலைகிராமங்களை சந்தித்து ஒரு வாரம் மருத்துவ முகாம் நடத்துவது என்பது சாதாரண விஷயம் அல்ல.




**Dr. சாம் சகாயதாஸ்,** M.S.,

டிரைபல் மிஷனுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். **மிஷனரிகளின் பிள்ளைகளின்** படிப்பு செலவுகளையும் தாங்குங்கள். ஆதிவாசிகள் கூடி ஆராதிக்க சில இடங்களில் **ஆலய கட்டிடங்கள்** தேவை. இவைகளை எல்லாம் **டிரைபல் மிஷன் ஜெப பங்காளர்கள்** பொறுப்பேற்றால் மிஷனரி பணியை விரிவடைய செய்யலாம்.

# டிரைபல் மிஷன் தொடங்கிய விவரம்

## *முதல் பயணம்...*

பல ஆண்டுகளுக்கு முன்பே என் பத்திரிகையான **ஜாமக்காரனில் மனிதர்களை கானாத மனிதர்கள்** என்ற தலைப்பில் டிரைபில் மிஷன் தொடக்கத்தை குறித்து எழுதியிருந்தேன். ஆண்டுகள் பல கடந்ததால் இப்போது புதிய தலைமுறைகள் **டிரைபில் மிஷன்** பங்காளர்களாகவும். பொருப்பாளர்களாகவும். இணைந்துள்ளனர். அவர்களுக்காக மிகச் சுருக்கமாக டிரைபல் மிஷன் ஆரம்ப கால சம்பவங்களை இங்கு குறிப்பிடுவது நல்லது என்று உணர்ந்தேன். எழுதுகிறேன்.

மலையாள **மனோரமா** என்ற பிரபல தினசரி பத்திரிகையில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் அடர்ந்த காடுகளுக்குள் **சோள நாயக்கன்மார்** என்ற அரை நிர்வாண ஆதிவாசிகள் கூட்டம் வாழுவதாகவும் அவர்கள் கேரள அரசாங்க பதிவேட்டில் காணப்படாத ஒரு கூட்டம் என்றும் எழுதப்பட்டிருந்தது. வன இலாக்கா அதிகாரிகள், வன அலுவலர்கள் கண்களில் கூட தென்படாத ஒரு **ஆதிவாசிகளின்** கூட்டத்தை மனோரமா பத்திரிகை நிரூபர் மூலமாக கண்டுபிடிக்கப்பட்ட செய்திகளையும் அவர்களைப்பற்றிய தகவல்களையும் ஒரு தொடர்கதை போல மனோரமா செய்தித் தாளில் தொடர்ந்து எழுதப்பட்டதை வாசிக்க கேரள மக்கள் ஆவலோடு காத்திருப்பதை கண்டேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும் அவர்களை குறித்து ஆச்சரியமான தகவல்களை மக்கள் வாசிப்பதையும் கண்டேன்.

அவைகளை குறித்து கேரள கண்வென்ஷனில் நான் பிரசங்கிக்க செல்லும்போது எனக்கு மலையாளம் எழுதவும் படிக்கவும் தெரியாததால் மொழிபெயர்ப்பாளரிடம் அன்றை மலையாள பத்திரிகையின் செய்திகளை வாசித்து கூறும்படி கேட்டுக்கொண்போது ஆதிவாசிகளின் விவரம் என் உள்ளத்தில் ஆச்சரியம் மட்டுமல்ல அந்த ஆதிவாசிகளைபற்றி இனம் புரியாத பாரமும் ஏற்பட்டது. ஏற்கனவே நான் **மலை ஊழிய மிஷனரி** அழைப்பை பெற்று பாதியில் திரும்பியவன் ஆகும். ஆகவே உள்ளத்தில் அந்த மக்களை சந்திக்க வேண்டும், இயேசுவை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்ற பாரம் நாளுக்கு நாள் அதிகமானது. ஆகவே வேதத்தில் **நெகேமியா** என்ற பக்தன் **எருசலேம் பாழடைந்ததை** கேள்விபட்டவுடன் அரண்மனையில் விடுமுறை பெற்று தனியே சென்று ஆண்டவரின் பணியை குறித்து **அழுது** உபவாசித்து **ஜெபித்ததால்** கர்த்தர் அவன் பொருப்பிலேயே எருசலேம் கட்டுமானப் பணியை ஒப்படைத்தார். அப்போது அவன் முதலாவது செய்தது **குதிரையில் ஏறி** எருசலேம் பகுதிகளைக்குறித்தும் அதை சுற்றியுள்ள மக்களைக்குறித்தும் விவரம் சேகரித்து அதன் பிறகுதான் பணியை தொடங்கிமுடித்தான். அதுபோல அந்த ஆதிவாசிகள் வாழும் நிலம்பூர் வன பகுதியை குறித்து விவரம் சேகரிக்க நான் மட்டும் தனியர்க செல்ல தீர்மானித்தேன்.

1976ம் வருடம் ஜூன் மாதம் 11ம் தேதி நான் தனியாக பயனம் மேற்கொண்டேன். ஏற்கனவே நான் நிலம்பூர் டவுனில் உள்ள CSI சபையில் கன்வென்ஷனில் பிரசங்கிக்க சென்றிருக்கிறேன். Rev. P.R. Thomas அவர்களின் உறவினரை உதவிக்கு அழைத்திருந்தேன். அவர் நிலம்பூர் ரயில்வே ஸ்டேஷனில் வந்து தன் மோட்டார் வைக்கிளில் ன்னனை உட்கார வைத்து ஸ்டேஷன் அருகே உள்ள **பாஸ்டர் ஜான்** (வயது 98) என்பவர் வீட்டுக்கு அழைத்து சென்றார். அவர் மகன் திரு. **ஜான்சன்** அவர்கள் நிலம்பூர் மலையை பற்றிய விவரங்களையும் **இருளர்** என்ற ஆதிவாசி இனத்தில் உள்ளவர் உதவியில்லாமல் உங்களால் அந்த குறிப்பிட்ட இடத்துக்கு செல்ல முடியாது என்பதை போன்ற விவரங்களையும் கேட்டு அறிந்தேன். உடனே மலை ஏறாமல் உடனே அன்றே தமிழ்நாட்டுக்கு திரும்பிவிட்டேன்.

## *இரண்டாம் பயணம்....*

- அதன்பின் கேரளாவில் நடந்த ஒரு கன்வென்ஷன் கூட்டத்தில் குறிப்பிட்ட மலை ஊழியத்தைப்பற்றி பகிர்ந்துகொண்டேன். அதை கேட்ட என் நண்பர் டெலிபோன் எக்சேஞ்சில் பணிபுரியும் Mr. **குரியாகோஸ்** என்பவர் 4-10-1976 அன்று எனக்கு கடிதம் எழுதி உங்களைப்போல் அந்த குறிப்பிட்ட ஆதிவாசிகளைக்குறித்து பாரம் உள்ள நபர்கள் நான்குபேர் என்னிடம் அந்த மலைக்கு போவதைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். ஆகவே நாம் இணைந்து அந்த மலைக்கு செல்வோம் என்று எழுதினார். உடனே குறிப்பிட்ட தேதியில் 5 நபர்கள் கேரளாவில் உள்ள **பெரும்பாவூர்** என்ற இடத்தில் ஒன்று கூடி **உபவாசம்** செய்து **ஜெபித்து** பயணமானோம்.



*டிரைபில் மிஷன் முதல் மலை ஊழியத்தில் இரண்டாம் பயணத்தில் **நான் அழைத்து** சென்ற சகோதரர்கள். இவர்கள்தான் **டிரைபில் மிஷன்** வளர்ந்தவுடன் ஸ்தாபனத்தின் முதல் **நிர்வாக குழுவினரானார்கள்.***

**டிரைபில் மிஷன்** முதல் பொதுச் செயலாளர் Mr. **மோகன் குறியன்** ஆகும். காணும் படத்தில்

(வடமிருந்து இடம்) Mr. T.S. தோமஸ், Mr. குறியாகோஸ், Mr. மோகன் குறியன், Mr. K.T. மேத்யூ, Dr. புஷ்பராஜ் ஆகிய எங்களை நிலம்பூர் மலை அடிவாரத்தில் ஜெபித்து வழியனுப்பின 98 வயது பாஸ்டரும் படத்தில் உள்ளார்

நாங்கள் நிலம்பூர் மலையில் ஆதிவாசிகள் இருக்கும் இடத்துக்கு வழி காண்பிக்க அந்த குறிப்பிட்ட ஆதிவாசி கூட்டத்தின் பையன் ஒருவனை கர்த்தர் எங்களுக்கு காட்டினார். அவன் உதவியுடன் மணி நேரம் மலை ஏறி அவர்கள் வாழும் இடம் சென்றடைந்தோம். தங்கி ஊழியம் செய்து திரும்பினோம்.

## மூன்றாம் பயணம்....

மூன்றாம் பயணத்தில் அந்த ஆதிவாசிகளுக்கு தேவையான உடைகளும், அரிசி, உப்பு கொண்டுபோய் கொடுத்து அவர்களின் அன்பையும் பெற்று சுவிசேஷம் அறிவித்தோம்.

கீழே அவர்களுக்கு நான் வைத்தியம் செய்து உடைகளையும், அரிசியும் ஒப்படைத்து இயேசுவிடம் ஜெபிக்க கற்றுக்கொடுத்து திரும்பினோம்.



## டிரைபில் மிஷனில் டாக்டர் முரளிதர், M.D., (Cordialogist) அவர்களின் பிரவேசம்



(கேரளம்) கோட்டயத்தில் நான் நடத்தின உபவாச ஜெப கூட்டத்தில் முதல்முறை Dr. முரளிதர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அக்கூட்டத்தில் நான் மிஷனரி ஊழியத்தை பற்றியும் அதிவாசிகள் ஊழியங்கள் பற்றியும் நான் விவரித்து கூறினேன். நான் அந்த கூட்டத்தில் கர்த்தருடைய செய்தியையும் பகிர்ந்து கொண்டேன். அந்த கூட்டம்தான் டாக்டர் முரளிதர் அவர்கள் ஜீவியத்தில் மிஷனரி ஊழியத்தில் தன்னை இணைத்துக்கொள்ள காரணமாயிருந்தது.

படத்தில் இடமிருந்து வலம் இரண்டாவது நபர் **டாக்டர் முரளிதர்** எனக்கு பின்னே கண்ணாடி அனிந்திருப்பவர் டிரைபில் மிஷன் பொருளாளராக முதல் பொறுப்பு ஏற்றவர். இதன்பிறகுதான் டிரைபில் மிஷனை டிரஸ்ட்டாக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டது. அப்போது டாக்டர் முரளிதர் அவர்கள் டிரைபில் மிஷன் பொது செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

Dr. முரளிதர் அவர்கள் (கேரளாவில்) Quilon கொய்லோன் என்ற ஊரில் கத்தோலிக்கர்கள் நடத்தும் பெரிய ஆஸ்பத்திரியான Benziger Hospital தலைமை இருதய வியாதி சிகிச்சை நிபுனராக நிறைந்த சம்பளத்தோடு வேலை செய்து வந்தார். அதோடு அவருக்கு பிரசங்க தாலந்தும் விசேஷமான முறையில் கர்த்தர் கொடுத்திருந்தார்.

டிரைபில் மிஷன் ஊழியத்தோடு - கன்வென்ஷனில் பிரசங்கித்தும் தன் வைத்திய தொழிலையும் செய்து வந்தார்.

☐ டிரைபல் மிஷன் ஊழியத்தில் மிக முக்கிய பொருப்பேற்று இருக்கும் டாக்டர். **முரளிதர்**,M.D., அவர்களுக்காக அவரின் **ஆரோக்கியத்திற்காக** ஜெபித்துக்கொள்ளுங்கள். **டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியின்** பொறுப்பு, ஆதிவாதி பிள்ளைகளுக்கான **பள்ளிக்கூடங்களை நடத்தும்** பொறுப்பு. அரசாங்க பணஉதவி இந்த பள்ளிக்கூட டீச்சர்களுக்கு இல்லாததால் மாதாமாதம் அவர்களின் **சம்பள தேவைகளை** சந்திக்க Dr.முரளிதர்,M.D.,அவர்கள்தான் பங்காளர்களைதேடி **கண்டுபிடிக்க** அலையவேண்டியுள்ளது. டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரி **ஆனைக்கட்டி** என்ற மலையில் சிறப்பாக, நல்ல **நவீன கருவிகளோடு** இயங்குகிறது. வியாதியஸ்தர்களும் அதிகமாக வருகிறார்கள். ஆனால் வரும் வியாதியஸ்தர்கள் **ஏழை ஆதிவாசிகளாக** இருப்பதால் அவர்களிடமிருந்து மருந்து செலவுக்கோ, ஆப்ரேஷன் செலவுக்கோ பணம் எதிர்ப்பார்க்க முடிவதில்லை. **சிறிய அளவு** பணம்தான் மருந்துக்கும், **ஆப்ரேஷனுக்கும்** இவர்களிடமிருந்து வாங்குகிறார்கள். பெரும்பாலான ஆதிவாசி வியாதியஸ்தர்களிடமிருந்து **பணம் கட்டாயப்படுத்தி வாங்க முடிவதில்லை. இலவச** சிகிச்சை பெரும் வியாதியஸ்தர்கள்தான் அதிகம்.

டிரைபல் மிஷனுக்கு வெள்ளைக்கார **வெளிநாட்டு** ஸ்தாபனங்களின் உதவிகள் கிடையாது. மிஷனரி குடும்பங்களுக்கும் **இலவச வைத்தியம்தான்** செய்யப்படுகிறது, மற்ற **மிஷனரி ஸ்தாபனங்களியலிருந்தும்** இலவச சிகிச்சைக்கு **ஆனைகட்டி** டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியை தேடி வருகிறார்கள். அவர்களுக்கு சிகிச்சை செய்ய முடியாது என்று எப்படி அவர்களை திருப்பி அனுப்பமுடியும்?

இத்தனை சிரமங்களையும், இதன் தேவைக்கான ஏற்பாடுகளையும் **டாக்டர். முரளிதர்தான்** தன் தலையில் **சுமந்து** அலைகிறார். அதனால் அவருக்காக நாம் தினசரி ஜெபிக்கவேண்டியது மிக அவசியம். **Dr. முரளிதர்** அவர்களுக்கு **இருதய ஆப்ரேஷன்** செய்யப்பட்டிருக்கிறது. **சர்க்கரை வியாதி** ஒரு பக்கம், **இரத்த கொதிப்பு** மறுப்பக்கம் இத்தனையும் சுமந்து கொண்டு **கன்வென்ஷகளிலும்** பிரசங்கிக்க இந்தியா-மற்றும் உலகம்

முழுவதும் போய்வருகிறார். அதன் மூலம் கிடைக்கும் காணிக்கையை அப்படியே டிரைபல் மிஷனில் பல்வேறு தேவைகளுக்காக கொடுத்துவிடுகிறார்.

☐ **டிரைபில் மிஷன்** ஊழியத்தில் **டாக்டர் புஷ்பராஜ்** ஆகிய என்னுடைய **பங்கு மிக குறைவு. ஒன்றுமில்லை** என்றும் கூறலாம். காரணம், என் ஊழியம் **மாறுபட்ட ஊழியம்** ஆகும். ஒவ்வொரு மாதமும் நான்கு வாரமும் பல்வேறு ஊர்களுக்கு ஊழியத்துக்காக நான் சென்று வருகிறேன். வாரத்தில் **இரண்டு நாட்கள்** மட்டுமே சேலத்தில் என் வீட்டில் தங்குகிறேன். இதன் மத்தியில் நான் ஜாமக்காரன் **பத்திரிக்கை ஊழியமும் செய்கிறேன்.** மலையாள பாஷை **மொழிபெயர்ப்புக்கும்,** பத்திரிக்கை செய்தி **எழுதுவதற்கும்** நேரம் ஒதுக்கவேண்டும் இதுதான் என் நிலை ஆகும். **டிரைபல் மிஷன் ஸ்தாபகன்** என்ற நிலையில் டிரைபல் மிஷனுக்காக நான் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பது என் மனசாட்சியை மிகவும் வேதனைப்படுத்துகிறது.

## டிரைபில் மிஷன் ஆஸ்பத்திரி ஆரம்பித்த விவரம்

மார்தோமா சபை அங்கத்தினரும் ஓய்வுபெற்ற அதிகாரியுமான Late Mr. Thomas என்பவரின் பிள்ளைகள் அமெரிக்காவில் பிரபல டாக்டர்களாக பணிபுரிகிறார்கள். இந்தியாவில் ஏதாவது சமூக தொண்டு செய்யவேண்டும் என்ற பாரத்தில் கோயமுத்தூர் நகரத்துக்கும் அட்டபாடி என்ற கேரள ஜில்லா எல்லையில் யானைகள் நடமாடும் **ஆனைகட்டி** என்ற இடத்தில் பல ஏக்கர் நிலம் வாங்கியிருந்தார்.

அந்த இடத்தை **டிரைபில் மிஷன் வெல்பேர் டிரஸ்ட்க்கு** ஒப்படைத்து சமூகபணி செய்ய கேட்டுக்கொண்டார். அந்த மலையில் இருளர், முதுவாஸ், சோளநாயக்கன்மார் போன்ற ஆதிவாசிகள் சுமார் 6000 குடும்பத்தினருக்கு வைத்திய வசதி இல்லாததால் அந்த நிலத்தில் ஆஸ்பத்திரி கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது.

Dr. புஷ்பராஜ் ஆகிய நான் (சென்னை) சகோ. **சாலமோன்** என்ற சகோதரனை ஆனைகட்டியில் மிஷனரி ஊழியம் செய்யவும். முதலாவது அந்த பெரிய நிலத்தின் எல்லை முழுவதும் **வேலி அமைக்கும்** ஏற்பாட்டை அவரை வைத்து செய்து முடித்தேன். இந்த குறிப்பிட்ட சகோதரன் மனைவியுடன் CSI கிறஸ்தவ உயர்நிலை பள்ளியில் டைப்பிஸ்டாக வேலை செய்து விடுமுறை நாட்களில் ஊழியமும் செய்வார். என் அலுவலகத்திலும் விலாச பட்டியல் தயாரிக்க உதவி வந்தார்.

சகோ சாலாமோனும் நானும் சேர்ந்து சில லட்சங்கள் செலவு செய்து கல் தூண்கள் - இரும்பு **முள்வேலி** அமைக்கும் ஏற்பாட்டை செய்தோம். அன்று ஆனைக்கட்டியில் இப்போதுள்ள ஆஸ்பத்திரி மெயின் கேட் அருகில் பெரிய கிணறும் ஒரு சிறிய **ஓட்டு வீடும்** இருந்தது. இப்போதும் அந்த வீடு அங்கு உண்டு. அந்த வீட்டை சுத்தம் செய்து அவர் தனியாக கூலி ஆட்களையும் தன்னுடன் வைத்துக்கொண்டு தங்கினார். சில வாரங்களில் நானும் இரண்டு இரவும் பகலும் அந்த வீட்டில் தங்கி கணக்குகள் சரிபார்த்து

நடக்கும் பணியையும் கண்காணித்தேன். மாலை நேரத்தில் கூலி ஆட்களுக்கு இயேசுவை பற்றி கூறி ஜெபிப்போம்.

நான் அந்த வீட்டில் தங்கிய நாளில் அந்த வீட்டின் அருகே உள்ள கிணற்றில் நிறைய பாம்புகள் உண்டு. அவைகள் வீட்டுக்குள்ளேயும் அடிக்கடி தென்படும். கர்த்தர் சகோதரனையும், கூட தங்கிய கூலியாட்களையும் **பாம்**புகளிடமிருந்தும் **யானை** கூட்டத்திடமிருந்தும் எல்லாரையும் காப்பாற்றினார். ஒரு வழியாக எல்லை முழுவதும் வேலி அமைக்கும் பணி முடிந்தது. அந்த சகோதரனையும் சென்னைக்கு திரும்பி அனுப்பிவிட்டேன்.

வேலி ஏற்பாடுகள் முடிந்ததும் Dr. முரளிதரும் குடும்பத்தோடு கொல்லம் ஆஸ்பத்திரி வேலையை ராஜினாமா செய்து ஆனைகட்டியில் குடும்பத்தோடு குடியேறினார்.

Dr. முரளிதர் அவர்களும் புதிய நிர்வாகத்தினரும் ஆஸ்பத்திரி கட்டும் ஏற்பாட்டை ஏற்றார்கள். மளமளவென்று ஆஸ்பத்திரி பணி முடிந்தது.

Dr. முரளிதரும் ஆனைகட்டி பொத்தானி ஆஸ்பத்திரி பொருப்பேற்றார். **Tribal Welfare Trust Hospital** முறைப்படி தொடங்கியது.

Dr. முரளி உள்ளத்தில் ஆவியானவர் ஏவ ஆதிவாசி பிள்ளைகள் மூலமாக இயேசுவை வசனத்துக்குள் கொண்டுபோகலாமே என்ற சிறிய அளவில் டே கேர் சென்டர்போல சிறிய வகுப்புகள் தொடங்கினார். அது வளர்ந்து பிரமாண்டமான High School ஆக மாறியது. ஆதிவாசி பிள்ளைகளுக்கான தங்கும் விடுதி உருவானது. ஆவியானவர் பலருடைய உள்ளத்தில் ஏவ பள்ளிக்கூடம் விரிவடைந்தது.

☐ ஆஸ்பத்திரியில் ஆதிவாசிகளுக்கு இலவசமாக வைத்தியம் பார்க்கப்பட்டது. ஆப்பரேசன் கூட இலவசமாக செய்யும் நிலை ஏற்பட்டது. ஆனால் அதற்கேற்ற வருமானம் இல்லை. பல நாடுகளில் வாழும் இந்தியர்கள் ஆனைகட்டி டிரைபல் மிஷன் சேவைகளை பாராட்டி பணம் அனுப்பினார்கள். ஆனால் அதுவும் போததத்தாக இருந்தது. டாக்டர்களுக்கு சம்பளம், நர்ஸ்களுக்கு, ஆஸ்பத்திரியில் மற்ற பணியாளர்களுக்கும் சம்பளம் கொடுக்கவும் மருந்துகள் வாங்கவும் பெரும் சிறமமாக இருந்தது.

அந்த நாட்களில் ஆனைக்கட்டி ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு கொடுத்த சம்பளம் மிக குறைவுதான் ஆனால் சேவை மனப்பான்மையுடன் உள்ள டாக்டர்களானதால் பொருத்துக்கொண்டார்கள்.

அந்த காலத்தில் 2010 ஆண்டில் டாக்டர்களுக்கு கொடுத்த சம்பளம். :

| | |
|---|---|
| Dr. ANAND (Surgeon) | 40,000.00 |
| Dr. RANJINI (Gynaecolo) | 40,000.00 |
| Dr. RAJASEKARAN | 40,000.00 |
| Dr. CLEMENT (Ortho Surgeon) | 30,000.00 |
| Dr. MEERA (Resident Doctor) | |

Dr. PETER ( Pediatrician U.K.)

Dr. JENNY (Pediatrician)

Dr. Mrs. ALEYAMMA MURALIDAR 20,000 00

ஆனால் DR. MURALIDHAR மட்டும் வெரும் 15,000 ரூபாய் மட்டும் போதும் என்று கூறி சம்பளம் பெற்று தன் 3 பெண் பிள்ளைகளையும் ஒரு மகனையும் படிக்க வைத்து பெண்களின் திருமணத்தை முடித்தார். அவர்கள் சிறப்பாக குடும்ப வாழ்கைை வாழ்கிறார்கள்.

## ஆனைக்கட்டி ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் ஒரு திருப்பம்

டிரைபல் மிஷன் ஊழியத்தில் சுமார் 225 மிஷனரிகள் வட இந்தியா ராஜஸ்தான் வரை மிஷனரிகள் ஊழியம் செய்து பல ஆலயங்கள் கட்டப்பட்டு ஏராளமான ஆத்துமாக்கள் கர்த்தரின் தொழுவத்தில் வந்துள்ளனர்.

டிரைபல் மிஷனரி ஊழியம் டிரைபல் பிள்ளைகளுக்கான மெட்ரிக்குலேஷன் பள்ளி இப்படிப்பட்ட ஊழியங்கள் மிக சிறப்பாக நடந்துகொண்டிருந்தாலும டாக்டர் முரளிதர் அவர்களின் தரிசனத்தில் ஒன்றான டிரைபல் ஆஸ்பத்திரி (பெத்தானி ஆஸ்பத்திரி) நடத்துவதில் மிக சிரமங்களை சந்திக்க வேண்டியுள்ளது.

டாக்டர்களின் சம்பளம் 2010ல் இருந்ததைவிட இப்போது கூடுதலாக கொடுக்கப்படுகிறது. ஆனாலும் **தனியார் மருந்துவமனையில்** டாக்டர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் ஆனைகட்டி ஆஸ்பத்திரியைவிட இரண்டு மடங்கு அதிகம். இன்று அனேக கிறிஸ்தவ **ஆஸ்பத்திரிகள்** CSI, லூத்தரன் சபைகள் நடத்தும் ஆஸ்பத்திரி உட்பட மூடப்பட்டுகொண்டுவருகிறது. முக்கிய காரணம் **டாக்டர்களின் சம்பளம்.** தனியார் ஆஸ்பத்திரி கொடுக்கும் அளவு சம்பளமாக இல்லாமல் போனாலும் அவர்கள் கொடுக்கும் சம்பள விகிதத்தை தொடும் அளவு டாக்டர்களுக்கும், நர்ஸ்மார்களுக்கு கொடுக்க முடியாது போவதுதான் முக்கிய காரணம் ஆகும்.

டாக்டர் வேலை **சமூக சேவை** என்றாலும், **ஊழியத்தின் ஒரு பங்கு** என்றாலும் டாக்டர்களுக்கும் குடும்பம், பிள்ளைகள், பிள்ளைகளின் படிப்பு இப்படி பல தேவைகள் உண்டே அவற்றை சமாளிக்க ஒவ்வொரு டாக்டருக்கும் அவர்களுடைய **படிப்பு - அனுபவம்** அடிப்படையில் ஒரு **நல்ல தொகை** கொடுத்தாக வேண்டும். இதற்காக Dr. முரளிதர் அவர்கள் அடிக்கடி Gulf ராஜ்யங்களுக்கு கன்வென்ஷனில் பிரசங்கித்து பிச்சை எடுப்பதுபோல பணம் பெற்று சில மாதங்களுக்கு ஆஸ்பத்திரி சம்பள பிரச்சனைகளை சமாளித்து வந்தார்.

ஆனால் இப்போது Dr. முரளிதர் அவர்கள் **இருதய ஆப்பரேஷன்** செய்த நிலையில் **சர்க்கரை** வியாதியும் **BPயும்** கூடிய நிலையில் அவரால் ஆஸ்பத்திரி **பண தேவையை** பூர்த்திசெய்ய முடியவில்லை. அதே சமயம் தன் **தரிசனமாகிய ஆதிவாசிகளுக்காக** என்று கட்டப்பட்ட ஆஸ்பத்திரியை **இழுத்து மூடவும்** முடியாமல், சதா அதே கவலையில் ஆழ்ந்துபோனார்.

☐ முடிவாக **வெல்லூர்** CMC ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் ஆஸ்பத்திரியை ஒப்படைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இது விஷயமாக **நானும்** டாக்டர் முரளிதர் அவர்களும் வெல்லூர் CMC ஆஸ்பத்திரி சென்று முக்கிய பொருப்பாளர்களை சந்தித்தோம். Dr. முரளிதர் அவர்களும் கடிதம் மூலம் எழுதி வேண்டுகோள் விடுத்தார். ஆனால் முயற்சி தோற்றுபோனது. கேரளாவில் திருவெல்லாவில் உள்ள பிஷப் K.P. யோகன்னான் அவர்களின் **பிலிவர்ஸ் சர்ச் மெடிக்கல் காலேஜ்** வசம் டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியை ஒப்படைக்க முயற்சி செய்தார். அவர்கள் ஆதிவாசிளுக்கு இலவச வைத்தியம் என்பது முடியாத காரியம். பெயர் பலகையில் டிரைபல் மிஷன் பெயர் சேர்க்கமாட்டோம். என்றெல்லாம் பல காரணங்கள் கூறி மறுத்துவிட்டனர்.

ஒரு **ஆஸ்ட்ரேலியா** சமூக சேவை ஸ்தாபனத்தோடு Dr. முரளிதர் தொடர்புகொண்டார். அதுவும் தோல்வியில் முடிந்தது.

இப்படிப்பட்ட முயற்சி செய்வதின் முக்கிய காரணம் நம்முடைய டிரைபல் மிஷன் ஊழியத்தின் நோக்கத்தில் ஒன்றாகிய **ஆதிவாசிகளுக்கு இலவச சிகிச்சை** அதன் மூலம் அவர்களுக்கு **சுவிசேஷம்** என்பது ஆகும். ஆனைக்கட்டியில் அமைந்துள்ள ஆஸ்பத்திரி எந்த ஸ்தாபனத்தின் மூலமாவது நடத்தப்படவேண்டும். இதற்காக அவர்கள் **டிரைபல் மிஷனுக்கு** எந்த **பணமும்** விலையாகவோ, **லீஸ்கான ஒரு தொகையோ** கொடுக்க வேண்டும் என்பது எங்களது எதிர்பார்ப்பு அல்ல.

**ஆனைக்கட்டி** ஆஸ்பத்திரி **மூடப்படாமல்** தொடர்ந்து சிறப்பாக தன் **சேவை மூலம் இயேசுவின் அன்பை** தெரிவிக்க வேண்டும். கோயமுத்தூரில் பல தனியார் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் ஆனைக்கட்டி ஆஸ்பத்திரியை ஏற்று எடுத்து நடத்தமுடியும். ஆனால் கிறிஸ்துவை அறிவிக்கும் நோக்கமும் ஆதிவாசிகளுக்கு இலவச வைத்திய என் நோக்கமும் அறவே நீங்கிவிடும். ஆகவே கிறிஸ்தவர் அல்லாத யாருக்கும் ஆனைக்கட்டி ஆஸ்பத்திரியை கொடுக்க முயற்சிக்கவில்லை.

இந்த நோக்கத்தை சிலர் தவறாக புரிந்துகொண்டு Dr. முரளிதர் டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியை **விற்க முயற்சிக்கிறார்** என்று என்னவெல்லமோ கற்பனை கதைகளை பேச ஆரம்பித்துவிட்டனர்.

**டிரைபல் மிஷன் சேரட்டபிள் டிரஸ்டை** யாரும் ஒருகாலும் விற்க முடியாது. ஆனால் ஆஸ்பத்திரியை **கிறிஸ்தவ ஸ்தாபனத்திடம்** ஒப்படைத்து அங்கு ஊழியம் தொடரவேண்டும்.

ஜாமக்காரன் வாசகர்கள். பலர் **பாஸ்டர்கள்** ஆயர்கள், வாசகர்கள் சில காலமாக எனக்கு எழுதிய கடிதத்துக்கும் மற்றவர்களின் **தவறான விமர்சனங்களுக்கும்** முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே. Dr. முரளிதர் அவர்களின் அனுமதியில்லாமல் ஆஸ்பத்திரி நிர்வாக குழு (Board Member) **அனுமதியில்லாமல்** இதை எழுதினேன்.

இத்தனை வருடம் வழி நடத்தின கர்த்தர் தம் ஆதிவாசி மக்களுக்காக அந்த ஆஸ்பத்திரி தொடர்ந்து இயங்க அருள்புரிவார் என்ற நம்பிக்கையோடும் ஜெபத்தோடும் முடிக்கிறேன்.

**டிரைபல் மிஷனரி** ஊழியத்துக்கு கிடைக்கும் காணிக்கை போதுமான அளவும் கூடதலாகவும் கிடைக்கிறது. **மிஷனரி ஊழியமும்** நன்றாக விருத்தி அடைந்துள்ளது. ஆதிவாசி **பிள்ளைக்கான மெட்ரிக் ஸ்கூலும்** தடையில்லாமல் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் ஆதிவாசி பிள்கைள் 10ம் வகுப்பில் 100/100 மதிப்பெண்கள் பெற்று **மாவட்டத்தில் முன்னணியில்** இருக்கிறார்கள்.

இங்கும் டீச்சர்களுக்கான **சம்பளப் பணம்** கொடுப்பதில் சிரமம் உண்டு. எப்படியோ அன்றன்றுள்ள ஆகாரத்தை கொடுத்து போஷிக்கும் தேவன் ஒவ்வொரு மாத சம்பள தொகை டீச்சர்களுக்கு கொடுக்க உதவுகிறார்.

இதை வாசிப்பவர்கள் **டிரைபல் மிஷன்** நடத்தும் மிஷனரி ஊழியம், **ஆதிவாசி** பிள்ளைகளுக்கான **பள்ளிக்கூட ஊழியம்,ஆஸ்பத்திரி** ஊழியம் ஆஸ்பத்திரில் பணியாற்றும் டாக்டர்கள், நர்ஸ்கள் மற்றும் உள்ள ஆஸ்பத்திரி அலுவலர்கள் ஆகிய இந்த தேவைகளுக்கு உதவுபவர்கள் கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

**டிரைபல் மிஷன் சம்பந்தப்பட்ட ஊழிய காணிக்கை எதுவும் கண்டிப்பாக என் பெயருக்கு அனுப்பிவிடாதீர்கள்.**

**Tribal Mission** (or) **Dr. Muralidar,**
Iringole Po., Perumbavoor, Ernakulam Dt,
KERALA - 683 545.

Money Transfer : **Dr. K. MURALIDAR,**
Cathalic Syrian Bank Ltd., Perumbavur
SB A/c. 0156-00706354 - 190001
IFSC : CSBK0000156
E-mail: tribalmission@hotmail.com.

என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

**என் ஆடுகள் சகல மலைகளிலும்**
**உயரமான சகல மேடுகளிலும்**
**அலையுண்டு**
**பூமியின் மீதெங்கும் என்**
**ஆடுகள் சிதறிக் திறிகிறது.**
**விசாரிக்கிறவனுமில்லை**
**தேடுகிறவனுமில்லை**

என்று நம்மை உண்டாக்கியவர் கூறுகிறார். எசே.



Bishop
Rt.Rev.Sharma Nithiyanandham

## வாழ்த்துகிறோம்! வரவேற்கிறோம்!!

வெல்லூர் CSI திருமண்டலத்தின் ஆறாவது பிஷப்பாக **Rt.Rev.H.SHARMA NITHIYANANDHAM,MTh,BD.,** அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு மனைவி,ஒரு மகன் உண்டு. ஆயராக பணியாற்றும்போது பண விஷயத்தில் உண்மையுள்ளவர் என்று பெயர் எடுத்தவர். குறிப்பாக குடிபழக்கம் இல்லாதவர் என்று கேள்விப்படுவது சிறப்புகுரிய அம்சமாகும். கர்த்தர்தாமே **வெல்லூர் திருமண்டலத்தை** இவர் காலத்தில் ஆவிக்குரிய திருமண்டலமாக மாற்றி பழைய பிரச்சனைகள்,ஊழல்கள் எதுவும் எழும்பாதபடி திருமண்டலம் சமாதானத்துடன் நடத்தப்பட கர்த்தர் அருள்புரிவாராக என்று என் சார்பிலும், ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும் வாழ்த்துக்கள் கூறுகிறோம்.

பிஷப் **Rt.Rev.H.SHARMA NITHIYANANDHAM** ஐயாவுக்காக ஜெபிப்போம்.

**JUNE - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.